**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170322T

## உலக நீர் தினம்: இலங்கையின் கிராமப் பகுதிகளில் சுத்தமான குடிநீரிற்கு உதவி வழங்கும் அமெரிக்கத் தூதரகம்

**மாபகடவெவ, மார்ச் 22-** ஊவா மாகாணத்தின் கெசல்பொத்த மகா வித்தியாலய பாடசாலைக்கு வருடம் முழுவதும் சுத்தமான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்வதற்காக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பின் (யுஎஸ்எயிட்) பிரதிநிதிகளுடன் இணைந்து மழைநீர் சேகரிக்கும் முறையொன்றை மாணவர்கள் பாடசாலையில் நேற்று ஆரம்பித்தனர் 2012ஆம் ஆண்டு முதல் யுஎஸ்எயிட் உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து வரட்சியால் பாதிக்கப்படும் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள பாடசாலைகளிலும் கிராமங்களிலும் இவ்வாறான 1000ற்கும் மேற்பட்ட திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

*''மார்ச் 22ஆம் திகதி சர்வதேச நீர் தினம் கடைப்பிடிக்கப்படுகின்ற இந்த தருணத்தில் இலங்கையின் கிராமப்புற பாடசாலைகள் நம்பகதன்மை மிக்க சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதற்கான வழிகளை வழங்குவது குறித்து அமெரிக்க மக்கள் மகிழ்ச்சி கொள்கின்றனர்''* என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்தார்.

லங்கா ரெயின்வோட்டர் ஹார்வெஸ்டிங் போரம் என்ற அமைப்புடன் இணைந்து நிலத்தடி நீரிற்கு மாற்றீடான பாதுகாப்பான சுத்தமான, புராதான தொழில்நுட்பத்தை அமெரிக்கா இலங்கையில் ஊக்குவிக்குகின்றது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக மழைநீர் சேமிப்பு தொழில்நுட்பத்தின் பலாபலன்கள் குறித்து அரச அதிகாரிகளிற்கும் நிபுணர்களிற்கும் பயிற்சியளிக்கப்படுகின்றது இயற்கை அனர்த்தங்களின் அபாயத்தை குறைப்பதற்காக நடமாடும் வானிலை அவதான நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கைவிடப்பட்ட 400ற்கும் மேற்பட்ட மழைநீர் சேமிப்பு அமைப்புகள் திருத்தப்படுகின்றன. மேலும் இது தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்து ஆராய்ச்சிகள் இடம்பெறுகின்றன.

இது தவிரஇலங்கையின் கிராமங்களை சேர்ந்த குடும்பங்களிற்கு 12000 குடிநீர் இணைப்புகளையும் 10000 மாணவர்களிற்கு சுத்தமான குடிநீரையும் அமெரிக்கா வழங்குகின்றது. சுகதாரவசதிகள் மற்றும் சிறந்த சுகதார பழக்கங்களிற்கு உதவுவதுடன் ஆதரவையும் வழங்குகின்றது. வெள்ள அபாயத்தை குறைப்பதற்காக நீர்ப்பாசனங்களையும் கால்வாய்களையும் புனர்நிர்மானம் செய்கின்றது. இயற்கை சூழலை பாதுகாக்க 5000 மரங்களை நாட்டுகின்றது. எதிர்கால இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் முன்கூட்டிய எச்சரிக்கையை விடுப்பது குறித்து 143 கிராமங்களை சேர்ந்த பெண் தலைவர்களை ஊக்குவிப்பதற்கான திட்டத்தையும் நடைமுறைப்படுத்துகின்றது.

1956ஆம் ஆண்டு முதல் அமெரிக்க அரசாங்கமும், யுஎஸ்எயிட் அமைப்பும் இலங்கையில் விவசாயம், வியாபார அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், சக்தி, இயற்கை வளங்கள், நல்லாட்சி மற்றும் மனிதாபிமான அபிவிருத்தி போன்ற துறைகளில் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு மேல் முதலீடு செய்துள்ளன

# # #